உ

சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஎ] யாழ்ப்பாணம்:- இராக்ஷத ஞு மார்கழி மீ உ-கூ வெள்ளிக்கிழமை (26-12-1975) [இல: நஎ

தில்லையம்பதியில்

## திருவாதிரையும் திருவெம்பாவையும்

[ எமது சிதம்பரம் சிறப்பு நிருபர் திரு. மா. பாலசுப்பிரமணியன் ]

தில்லையம்பதியில் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்மை சமேத ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் மார்கழித் திருவாதிரை மகோற்சவமும் திருவெம்பாவை விழாவும், கார்த்திகைத் திங்கள் 24 ஆம் நாள் முதல் மார்கழித்திங்கள் 4 ம் நாள் முடிய சிறப்பாக நடைபெற்றன.

திருவெம்பாவைவிழா 10 நாளும் தினசரி மாலையில் ஸ்ரீ மாணிக்கவாசகருக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடத்தப்பட்டு ஆஸ்திக அன்பர்கள் ஸ்ரீ மாணிக்கவாசகரை மஞ்சத்தில் எழுந்தருளச் செய்து தோளில் சுமந்து கொண்டு ஸ்ரீ நடராஜபெருமான் சந்நிதிக்கு. வந்தனர் தினசரி திருமுறைவாணர் திருவெம்பாவை 20 பாடல்கள் ஓதி ஒவ்வொரு பாடல் இறுதியிலும் கற்பூர ஆராதனைகள் ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு பூஜகர் செய்து, ஸ்ரீ மாணிக்கவாசகருக்கு 21 ஆவது ஆராதனைகள் செய்து வந்தார். 10 நாளும் ஏராளமான மக்கள் கூடி திருவெம்பாவை விழா தரிசனம் செய்தார்கள்

திருவாதிரைத் திருத்தேர் விழாவில் மழை பொழிந்ததால் தேர் ஓட்டம் நின்றுவிட்டது, ஆனால் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானை சிற்சபையை விட்டு புறப்பாடு செய்து, ராஜசபை என்று கூறும் ஆயிரங்கால் மண்டபத்திற்கு கொண்டு வந்து எழுந்தருளச் செய்தார்கள். அன்று பூராவும் ஆயிரங்கால் மண்டபத்திற்கு மக்கள் வருகை புரிந்து திருத்தேர்விழா தரிசனம் செய்தார்கள்

ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ நடராஜமூர்த்தி தேர் ஓட்டத்திற்கு தேரடிக்கு போகாமலே, திருக்கோயிலுக்குள்ளேயே நின்று விட்டது இதுவே முதன் முறையாகும் என்று கூறினர்கள்.

திருதருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிகஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவாதிரை தரிசனத்தன்றுகாலை ஆயிரங்கால் மண்டபம் வருகைபுரிந்து, ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ நடராஜமூர்த்திக்கு 1000( ஆயிரம்)நெய்லட்டுகள் பாவாடை (நிவேதனம்) போட்டு சாதரா சாற்படி செய்து ஆராதனைகள் நடத்தி தரிசனம் செய்து கொண்டு பொதுதீக்ஷிதர்களுக்கும், அன்பர்களுக்கும் லட்டுகள் வழங்கினர்கள்.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் 21 ஆவது அதிபரான ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித்தம்பிரான் சுவாமிகளும் வருகை புரிந்து ஆராதனைகள் நடத்தித தரிசனம் செய்து கொண்டார்கள்.

## சைவ சமய பாட போதனை

சைவசமய அடிப்படை மரபில் சைவப் பெருமக்களும் சைவ சபைகளும் மாண்புமிகு அரசும அங்கீகரித்த-பெருந்தியாகத்தில் உருவாகிய சைவசமய பாடத்திட்டம் சிவபெருமான திருவருளினுல் நடைமுறையிலுளது, இப்பாடத்திட்டத்தின் நோக்கத்திற்கு முரண்படாத வகையிலே அமைந்த பாட நூல்களிலேயே போதனை நடைபெறல் வேண்டும். சைவசமய மரபு, சைவசமய பாடத்திட்டங்களைப் பாடநூல்களோடு ஒப்பிட்டுச் சரிபிழை ஆய்ந்து, உண்மையான சைவசமயபாட போதனை சைவப்பிள்ளைகள் பெற ஆவன செய்யும் வண்ணம் பணிவாக வேண்டுகிறேம்

இவ்வண்ணம்

சைவசித்தாந்த அடியவன் க. கணபதிப்பிள்ளை

கௌரவ இயக்குநர், சைவப்பாதுகாப்புச் சேவை,

55/44, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

## பலநோக்கப் பணியாற்றிய பழையவர்

### முதலியார் முத்துத்தம்பிக்குப் பெரியார்களின் அஞ்சலி

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருக்கு யாழ்நகரில், அதுவும் மாநகரசபையின் காரியாலயச் சூழலில், சிலைவைக்க வேண்டும் என்ற எண்ணத்தை முதன் முதலில் தோற்றுவித்த பெரியார் திரு. செ. முத்துத்தம்பி அவர்கள் என யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு முருகேசம்பிள்ளை அவர்கள் முதலியார் செ. முத்துத்தம்பி அவர்களது இறுதிச் சடங்குகளின் போது அன்னரது சேவைகளை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தும் போது குறிப்பிட்டார்கள்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, திரு. முத்துத்தம்பி அவர்களை சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாகத் தமக்குத் தெரியும் என்றும் அவர் ஓர் சிறந்த சமூக சேவையாளன், அரசியல் வாதி, சீர்திருத்தவாதி, பக்திமான், சமய ஈடுபாடு கொண்டவர் எடுகாரியங்களை இனிது நிறைவேற்றும் திடம்கொண்ட பெரியார், அவர் இல்லாமல் யாழ்ப்பாணத்தில் எதுவித பரிசளிப்பு விழாக்களோ, வைபவங்களோ, கலாச்சார நிகழ்ச்சிகளோ இடம்பெறுவதில்லை என்றும் குறிப்பிட்டு அன்னருடைய பிரிவு யாழ்ப்பாண மக்களுக்கு, சிறப்பாக சைவர்களுக்கு ஓர் பேரிழப்பாகும் என்றும் கூறினர்கள்.

நல்லூர் பாராளுமன்ற உறுப்பினரும் யாழ்ப்பாண மாவட்ட அரசியல் அதிகாரியுமான திரு. சி. அருளம்பலம் அவர்கள் அஞ்சலி செலுத்தும பொழுது குறிப்பிட்டதாவது திரு. முதலியார் முத்துத்தமபி அவர்கள் தமது நீண்ட நெடுநாளைய நண்பன் என்றும், அவரது அரசியலில் கண்ணியம் நிறைந்து இருந்தது என்றும், எல்லோருடனும் சிரித்துப் பழகும் குழந்தை உள்ளம் படைத்தவர் என்றும். அவர் இல்லாத சங்கங்கள், சமூக இயக்கங்கள் பொதுநலச் சேவைகள், சிரமதானங்கள், சைவ சபைகள் எதுவும் யாழ்ப்பாணத்தில் இருந்திருக்க முடியாது என்றும் குறிப்பிட்டார்கள். அன்னரது பிரிவு யாழ்ப்பாண மக்களுக்கு தாங்கொணுத்துயர் என்றூர்கள்.

கிளமன பாராளுமன்ற உறுப்பினர் திரு. எம் சி. சுப்பிரமணியம் அஞ்சலி செலுத்தும் பொழுது தாமும் முதலியார் முத்துத்தம்பியும் எதிர்த்து மாநகரசபைத் தேர்தலில் போட்டி இட்டாலும், கொள்கைகளில் வேறுபட்டிருந்தாலும், தாம் என்றும் இனிய நண்பர்களாகவே இருந்தமையைத் தெரிவித்தார்கள். இவரது அரசியலிற் கண்ணியமும் நேர்மையும் இருந்தது என்றும் இவர் யாழ்ப்பாண மக்களுக்குச் செய்த சேவைகளை நினைவு கூர்ந்தார்கள்.

சைவபரிபாலன சபைச் செயலாளர் திரு. வை. இரகுநாதமுதலியார், சைவபரிபாலன சபையின் சார்பில் அன்னருக்கு அஞ்சலி செலுத்தும பொழுது குறிப்பிட்டதாவது, முதலியார் முத்துத்தம்பிக்கும் சைவபரிபாலன சபைக்கும் ஒரே வயது, அவர் சபையினது நீண்டகால ஆயுள் அங்கத்தவர் என்றும், அவர் பல்லாண்டுகளாக சபையினது உபதலைவராகவும் இருமுறை பதில்தலைவராகவும் கடமை ஆற்றிச் சபையினது சீரிய பணிகளுக்கு ஒத்துழைத்து, ஆக்கபூர்வமான ஆலோசனை அவ்வப் பொழுது நல்கி சபையை மேல் நிலைக்கு வரச் செய்தார் என்றும் குறிப்பிட்டார். இந்துசாதனம் தமிழ் ஆங்கிலம் இரு பிரசுரங்களும் ஒவ்வொரு சைவ மக்களது வீட்டிலும் இருக்க வேண்டும் என்று உழைத்தவர், இலங்கை வாழ் சைவ மக்களை வழி நடாத்தும் ஒரே பழம் பெரும் ஸ்தாபனம் சைவ

## சமூக பொருளாதார கல்வி கலை கலாச்சாரப் பேரவை

இப்பேரவையின் அமைப்புப் பொதுக் கூட்டம் 29-12-1975 திகதி யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் மாலை 5-30 மணிக்கு நிகழும்.

சட்டத்தரணி திரு. த. சோமசுந்தரம் அவர்கள் தலைமை தாங்குவார்கள். பண்டிதமணியும் வண. தனிநாயக அடிகளும் ஆசியுடன் கூட்டம் ஆரம்பமாகும்.

## இசை விழாவில் பண்ணிசை விருந்து

— 0 —

கொழும்பு இலங்கை சங்கீத சபையினர் பம்பலப்பிட்டி மாணிக்க விநாயகர் ஆலய மண்டபத்தில் 27, 28, ம் திகதிகளில் கொண்டாட விருக்கும் இசைவிழாவின் இறுதி நாளாகிய 28ம் திகதி இசை வாரிதி திருமுறைக் கலாநிதி எஸ். கே. சிவபாலன் அவர்கள் பண்ணிசைக் கச்சேரி நிகழ்த்தவுள்ளார்.

பரிபாலன சபையே என்று ஆணித்தரமாக எடுத்துரைத்தவர், சேர்பொன் இராமநாதன், ஞானப்பிரகாச முனிவர், ஆகியோருக்கு நினைவு தினம் குருபூசை ஆகியவற்றை எடுப்பித்தவர். மேலும திருநெல்வேலியில் ஞானப்பிரகாசமுனிவர் பிறந்த இடத்தில் அவருக்கு ஓர் சிலை நிறுவி நினைவு மண்டபம் அமைக்க வேண்டும் என்றும் பாடுபட்டவர். சைவ பரிபாலன சபையின் வளர்ச்சி கருதி தாம் பல ஆண்டுகளாக அரும்பாடுபட்டுச் சேர்ந்த ஆயிரத்திற்கும் அதிகமான நூல்களை, சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான நூல்களை, எமக்கு அன்பளிப்பாக வழங்குவதாக தெரிவித்து இது பற்றி முதல் அன்பளிப்பை சென்ற எமது அகில இலங்கைச் சைவ மகாநாட்டில் சிறப்பு நிகழ்ச்சியின் போது தெரிவிததார்கள். அன்னரது கனவுகளை நனவாக்க சைவபரிபாலன சபை முயன்று வருகின்றது. நாவலருக்கு சிலை எடுக்க வேண்டும என்று சைவபரிபாலன சபையில் தீர்மானம் கொண்டுவந்து அதற்காக பணமும் சேகரிக்கப்பட்டு, சிலைவைக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இதேபோல் சபை

( வளர்ச்சி 3 ஆம் பக்கம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

இராக்ஷத ஹூ மார்கழி மீ உசு - வெள்ளி

## சிந்தனைகள் சின்னபின்னப்படுவதேன்?

பேரவைகள் யாவும் இப்பூவுலகெங்கணுமே ஆரவாரமான சூழ்நிலையிற் கருத்துவேற்றுமையாற் கலக்குண்டிருக்கின்ற நிலைமையை நோக்கும் பொழுது மனிதப் பண்பு பாரதூரமான மாற்றம் அடைந்திருப்பது புலனாகின்றது. இந்நிலைக்குக் காரணம் யாதோ என்று பார்க்கும்பொழுது மக்கள் தத்தம் சமய நெறிமுறை நிற்காது தளம்பிவிட்டார்கள் என்றே சொல்லலாம்,

நாடாளுமன்றங்களிற் கருத்துவேற்றுமை பெரிதாக உண்டாகுமேயானால் மக்கள் அதன் விளைவை அநுபவிக்கவேண்டிவரும். ஆட்சி நடைமுறை அமைதியாக அமைவதற்கு அரசு எடுக்கும் முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்படுதலே நன்று, ஆகவே இம்மன்றங்களில் உறுப்பினர்களாக வருபவர்கள் சமயநெறிப் பண்பாளர்களாக இருத்தல் உத்தமமாகும், அவசரகால நிலைமை ஏற்படுவதற்கு இடமேயிராது.

தமிழக மக்களைப் பொறுத்தவரையில் இன்னும் மேலாகச் சைவமக்களைப் பொறுத்தவரையில் நீதிநெறிக்கு இலக்கணம் சமய நூல்களில் நன்கு வரைவு செய்யப்பெற்றிருக்கின்றதென்பதை யாவரும் அறிவர். பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் நீதிநெறியைப்பற்றிக் குறிப்பிட்ட ஒரு செய்தியை இந்து சாதனச் சென்ற திங்கள் இதழ் ஒன்றில் நேயர்கள் படித்திருப்பார்கள். அந்த நெறியை நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவர்களைத் தெரிந்துகொள்ளும் வாக்காளர்களும் நன்கு ஆராய்ந்து சிந்தை தெளிவார்களேயானால் நாடாளும நெறி கேடுறாது.

பொய்யா மொழியிலே தெய்வப்புலவர் அரசியல் என்ற பொருள்பற்றி வகுத்த அறிவுரையைத தமிழக மக்கள் கற்றுத்தேறி வேதசிவாகம நெறிவிளக்கும் சாத்திரங்களையும் புராணங்களையும் அறிவார்களேயானல் வாக்களிக்கும் கடமையைச் செவ்வனே செய்வர்.

"அறன் இழுக்கா தல்லவைநீக்கிமறன் இழுக்கா
மானம் உடைய தரசு"

என்ற பொன் மொழியின் பொழிப்பைப் புரிந்து கொண்டால் அறத்தினின்றும் வழுவாதொழுகுதலின் இன்றியமையாமை தெளிவாகும்.

நாவலர் பெருமான் வள்ளல் இராமநாதனை நாடாளுமன்றத்துறுப்பினராக வருவதற்குப் பாடுபட்டதன் கருத்தும் இதுவே.

இக்கால மாணாக்கர்களே எதிர்கால வாக்காளர்களாகி நாடாளும் நல்லுறுப்பினர்களாகும் தகைமையுறுவார்கள். ஆகவே தேசிய பொதுக் கல்வித்தராதரப்பத்திரப் பரீட்சைக்கு சமயம் ஒரு இன்றியமையாப் பாடமாக இருத்தல் வேண்டும என்று நாம் கருதுகின்றோம்.

சிந்தாகுல மானவை தீர்த்தெமையாள்
எத்தாயும் மெமக்கருள தந்தையுமாயவரைச் சிந்திக்கும்

கல்விமுறையைக் கணிப்பது கல்வித்திணைக்களத்தின் கடமையாகுமென்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

## அருட்பணி நிறைவுக்காக அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு

வண்- சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் புனருத்தாரண திருப்பணிநிதிக்காக நடாத்தப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டுத் தேர்வில் வெற்றி பெற்ற இலக்கங்கள்

8823 முதற் பரிசு 8326 இரண்டாம் பரிசு 8.77 மூன்றும் பரிசு

ஆறுதற்பரிசுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 9182, | 6713, | 9872, | 9445, | 7053, |
| 7271, | 225, | 8651, | 9491, | 287 |

8-12-75 மாலை 4 மணிக்கு சைவபரிபாலன சபைத்தலைவர் திரு. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் தெரிவு நடைபெற்றது.

## தருமையும் நல்லையும் ஒருங்கமர்ந்த அருட்காட்சி

(முன் வளர்ச்சி - 3)

நல்லைக் குருமணியுடன் தமிழக யாத்திரைபற்றியும் ஆங்கு ஆதீனங்களின் நிகழ்ச்சிகள்பற்றியும் மகாசந்நிதானங்களின் கலந்துரையாடலைப்பற்றியும் யான் பேசிக்கொண்டிருந்தேன்; அவ்வமையம் ஆதீனத்தில் மாணவனாகப் பணிபுரிந்து வருபவரான சிவச்செல்வன் நா, சுந்தரலிங்கத்தை அழைத்து "இவர் எங்கள் சந்திப்பிலும் உரையாடலிலும் உடனிருந்தவர். இவருடன் சிறிது நேரம் பேசுங்கள் என்று சுவாமிகள் கூறிவிட்டுச் சென்றார்கள்,

ஆதீனத்தில் முழுநாள் ஊழியர்களாகப் பணிபுரிபவர்களுள் செல்வன் சுந்தரலிங்கம் ஒருவரென்பதையும் சுவாமிகளுடன் பல தடவைகள் தமிழகப் பயணத்தை மேற்கொண்டவர் என்பதையும் நன்கறிந்தவனையால் அந்தச் சிவச்செல்வனுடன் யான் பேசலானேன்,

என்றும் சிரித்த முகத்துடன் எல்லோருடனும் மிக அன்பாகவும் பணிவுடனும் பழகும் சுபாவமுடைய சுந்தரலிங்கம் எனக்கு விபரங்களைக் கூறினார்.

### தருமைக்குப் பயணம்

நாங்கள் எக்மூர் என்னும் நிலையத்தைச் சேர்ந்தோம். ஆங்கு பலபிரமுகர்களும் சைவப் பெருமக்களும் குழுமி நின்று ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளுக்கு மாலை அணிவித்து மிகு மரியாதையுடன் வழியனுப்பி வைத்தார்கள், நல்லையாதீனத்திலே தொண்டு செய்யும் அடியார்க்கடியவனாகிய சிறியேனுக்கும் மாலையிட்டு நல்லையாதீனம் வாழ்க சிவனருள் பெருகுக என வாழ்த்தினார்கள். நாங்கள் இராமேஸ்வரம் கடுகதி வண்டிமூலம் முதலாம் வகுப்பில் மாயவரம் நிலயத்தை அதிகாலை சேர்ந்தோம். திருத் தருமையினின்றும் ஆதீன வாகனம் ஒன்று சுவாமிகளை அழைத்துச்செல்ல அவ்விடம் காத்து நின்றது. சுமார் 6 மணிக்கே தருமை ஆதீனத்திற்குச் சென்றோம். ஆதீனத்தில் எங்கள் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளுக்கென அமைக்கப்பட்டிருந்த ஜாகைக்கு எழுந்தருளிய அமையம் தருமையாதீனப்பண்ணிசை மாணவர்கள் கோளறு பதிகம் பாராயணம் பண்ணிக்கொண்டிருந்தனர் இது மிகவும் பொருத்தமாயிருந்தது சுவாமிகள் தமது ஆன்மார்த்த வழிபாட்டை முடித்துக்கொண்டு சுமார் 10 மணியளவில் தருமைக்குருமணி அவர்களைச் சந்திக்க எழுந்தருளினார்கள்; இரு மகா சந்நிதானங்களும் சந்தித்துக் கலந்துரையாடினார்கள், இச் சந்திப்பு மிகச் சிறப்பாயமைந்திருந்தது

### அருளாளர்கள் உரையாடல்

தருமைக் குருமணி நல்லைக் குருமணிக்குப் பொன்னாடை போர்த்தியும் அது அமையம் எங்கள் குருமணியும் தருமைக் குருமணிக்குப் பதில் பொன்னாடை போர்த்தியும் அன்புமீதூர அளவளாவினர், 'பூவோடு சேர்ந்த நாரும் — புனிதன் முடியேறும்' என்றாங்கு திருவருள் ஞானப் பேரொளி பரப்பும் அருட்செல்வர்களது சந்திப்பில் கலந்து கொள்ளச் சிறியேன் என்ன மாதவஞ் செய்திருக்க வேண்டும் என்று திருவருளைப் பிரார்த்தித்தவண்ணம் அமர்ந்திருந்தேன். தருமைக் குருமணி அவர்கள் நல்லை ஆதீனத்தின் நிதி நிலைமை, செயல்திட்டம், சொத்துகள், நிலைமை முதலியவற்றையெல்லாம்மிகக் [illegible] கள் அவைகளுக்கு பதில் கூறியதுடன் ஆதீன நிர்வாக [illegible] இவனிடம் ஆங்குள்ள நிலைமைகளை விசாரியுங்கள் என்றார்கள்.

### ஆதீனமும் தொண்டுகளும்

ஈழத்தில் சுவாமிகளின் தனிப்பட்ட முயற்சி, விடாவுழைப்பு செல்வாக்கு ஆகியவையே இன்று ஆதீன முன்னேற்றத்திற்குக் காரணம் என்பதை என் சிற்றறிவுக்கெட்டியவரை கூறினேன் சுவாமிகள் ஆங்கு விரிவுரைகளுக்குப் பணம் நிர்ணயித்துக் கேட்பதில்லையென்றும், அதிகமான இடங்களில் அன்பர்களுக்காக அன்பளிப்பு சிறு அளவில் ஏற்றுக்கொள்ளப் பெறுவதையும் இப்படியாக விரிவுரையின் வருவாயே ஆதீனச் செலவுகளுக்குப் பெரிதும் உதவுவதாகக்கூறியபோது தருமைக்குருமணி அவர்கள் தமது அறிவுரையை உதவினார்கள்.

### அருட்பணி வளர வழி

விரிவுரைகளுக்கு சுவாமிகள் பணம் எதிர்பார்க்காமல் விடலாம் என்றும். பக்கவாத்தியம் போக்குவரத்துச் செலவுபோக, ஒரு விரிவுரைக்கு ஆதீனத்திற்கு .01/= ரூபா கொடுக்க வேண்டும் என வரையறை செய்து பணத்திற்குப் பற்றுச்சீட்டு வழங்க ஆதீனத்தில் ஒருவர் இருக்க வேண்டும் எனவும், இப்படிச் செய்வதனாற் சிரமங்கள் தவிர்க்கப்படுவதுடன் இன்னமும் அநேக அருட்பணிகளை மேற்கொள்ள உதவியாக இருக்கும் என்றார்கள்

### எங்கள் குருமணியின் விண்ணப்பம்

இவ்விடம் திருமறை, திருமுறைப் பயிற்சிகளுக்கு உதவ வேண்டுமென எங்கள் குருமணி கேட்டபோது மனமுவந்து ஏற்றுக் கொண்டார்கள். சுவாமிகளுக்கு விலையுயர்த்த ஏறுகண்டி, 108 அக்குமணிகள், கல்லாடைகள் அன்பளிப்புச் செய்ததோடு ஆதீனத்தில் எத்தனை மாணவர்கள் பணிபுரிகின்றார்கள் என உசாவி அத்தனை பேருக்கும் வஸ்திரங்கள் அருளினார்கள்: சுவாமிகளின் சிஷ்யன் என்றமுறையில் சிறியேனுக்கும் விலையுயர்ந்த வேட்டியும் சால்வையும் வழங்கி ஆசீர்வதித்தார்கள். குருமணியின் பெருங்கருணை அளவிடற்கரிது என்று ஈழத்து அன்பர்களுட் பலர் பல தடவை கூறக் கேட்டிருக்கிறேன்.

### தெய்வீக மாநாடு

எங்கள் குருமணியின் கேள்விப்படி எதிரே வரும் சித்திரைத் திங்களில் நல்லை ஆதீனத்தில் நிகழவிருக்கும் திருநெறிய தெய்வீக மகாநாட்டிற்கு தருமை ஆதீனத்து சிறந்த ஓதுவா மூர்த்திகள் ஒருவரையும் சிறப்புச் சொற்பொழிவாளர் ஒருவரையும் தந்து சிறப்பிப்பதாகக்கருணைபுரிந்தார்கள்

### சோமவார தரிசனம்

அடுத்த நாள் கார்த்திகைச் சோமவாரம் திருக்கடவூரில் சகஸ்ர சங்காபிடேகம், கோபுர வாசலில் இருசந்நிதானங்களும் மங்கள விருதுகள், வாத்தியங்களோடு உள்ளே சென்று வழிபாடு செய்ய எழுந்தருளினர். பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். அன்னை அபிராமியின் அலங்காரம் கண்கொள்ளாக்காட்சியாயிருந்தது. காலசம்ஹார மூர்த்திக்குத் தங்கக்கவசஞ்சாத்தப்பட்டிருந்தது. பூஜை முடிவில் தருமைக் குருமணி எங்கள் குருமணிக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்; பின்பு பஞ்சமூர்த்திகள் வீதிஉலாக் காட்சியை இரு சந்நிதானங்களும் தரிசித்து தருமை திரும்பினார்கள்.

— 'நாயன்மார் - நாதன்'

## அணிந்துரை

### வாக்கிய பஞ்சாங்க நாட்காட்டி (1976)

வளம் பெறும் வண்ணம் வெளிவந்துள்ளது.

பஞ்சாங்கப் பல்வேறு விபரங்களையும் சைவமக்களுக்குப் பயன் பெறும வண்ணம் வெளியிடப்பெறும் புனித தோற்றமுள்ள பஞ்சாங்க நாளேடு இரகுநாதையர் நாளேடாகும்.

இல்லங்கள், அலுவலகங்கள் மற்றும் எல்லா இடங்களுக்கும் அணியாக வுள்ளதுமன்றி, ஆலயத் திருவிழாக்கள், நாயன்மார் குருபூசை விபரங்கள் முதலாம் அநேக விடயங்களை அறிவூட்டும் இவ் வெளியீடு வழமை போல வளமாக இவவாண்டும் தோற்றியிருக்கின்றது,

இரகுநாதையர் பஞ்சாங்கம் எவ்வித மதிப்புக் குரியதோ அவ்விதம் இந்தப் பஞ்சாங்க நாளேடும் கவர்ச்சியாகவும் கருத்துள்ளதாகவும் இருக்கின்றதென்பதை இதனைப் பயன் படுத்துபவர்கள் அனைவரும் அறிவர்.

கொக்குவில் சோதிடபரிபாலன மடத்து வெளியீடாகிய இத் தயாரிப்புக்குரிய ஆசிரியர் பிரமஸ்ரீ இ, வெங்கடேச ஐயர் அவர்கள் ஆவர்.

இவ் வெளியீடு இரகுநாதையர் சோதிடவிலாச புத்தகசாலையிலும் ஏனைய பிரபல புத்தக வியாபாரிகளிடமும் பெறலாகும்.

பிரதி விலை ரூபா! 3/—

## லக்ஷார்ச்சனை

புங்குடுதீவு மேற்கு மூத்தநயினார் புலம வீரகத்தி விநாயகர் ஆலயத்திலே விநாயகவிரத காலத்திலே 21 நாட்களாக லக்ஷார்ச்சனை தொடர்ந்து நடைபெற்று விநாயகர் சஷ்டியன்று முற்றுப் பெற்றது. 20 நாட்களாக நாடோறும் 108 சங்காபிஷேகமும் 21ம் நாளன்று 1008 சங்காபிஷேகமும் நடைபெற்றன 1971 ம் ஆண்டிலே முதன் முதலாக இந்த லக்ஷார்ச்சனை விநாயகவிரதகாலத்தில் நடைபெற்றது அவ்வண்டு உற்சமூர்த்திக்கும் இவ் ஆண்டு மூலஸ்தான மூர்த்திககும லக்ஷார்ச்சனை சிறப்பாக நடந்தேறிற்று இறுதி நாளன்று அர்ச்சனை முடிவிலே உற்சவ மூர்த்தி வீதியுலா வந்தார்.

## சித்தாந்தக் கட்டளை விளக்கவுரை வெளியீடு

திரு. தருமை ஆதினம் 26வது குருமகா சந்நிதானம் ஸ்ரீ. ல ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் அவர்கள், மார்கழித்திங்கள் 6மநாள் ஆதீனத்தின் 2ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ. ல. ஸ்ரீ ஆனந்த பரவச தேசிகஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் குரு பூஜை விழாவை சிறப்பாக நடத்திவைத்தார்கள்

ஸ்ரீ. ல. ஸ்ரீ. குருமகாசந்நிதானம அவர்கள காலையில் குருமூர்த்திற்கு எழுந்தருளி அபிஅபிஷேக அலங்கார ஆராதனைகளைச் செய்து அனைவருக்கும் குருமூர்த்தப் பிரசாதம வழங்கினார்கள்.

(நி. நீ.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

### யாழ்ப்பாணம் - சைவ பரிபாலன சபை

# சித்தாந்த பண்டித பரீட்சை 1975.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையாரின் ஆதரவில் நடைபெறும் சைவ சித்தாந்த பிரவேச, பால பண்டிதத் தேர்வுகள் இன்று (26-12 75 வெள்ளி) முதல் தொடர்ந்து மூன்று தினங்களுக்கு சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் (35, கல்லூரிவீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்) நடைபெறும். பரீட்சைக்கான நேரசூசிகள் வருமாறு:-

## சித்தாந்த பரீட்சை - நேர சூசி

| | பிரவேச பண்டிதர் | பால பண்டிதர் | பண்டிதர் |
|---|---|---|---|
| 26-12-75 வெள்ளிக்கிழமை | | | |
| மு. ப. 9 — 12 | இலக்கியம் | இலக்கியம் | இலக்கியம் |
| பி. ப, 1 — 4 | இலக்கணம் | இலக்கணம் | இலககணம் |
| 27-12-75 சனிக்கிழமை | | | |
| மு. ப. 9 — 12 | திருமுறை | திருமுறை | திருமுறை |
| பி. ப. 1 — 4 | சாத்திரம | சாத்திரம் | சாத்திரம் |
| 28-12-75 ஞாயிற்றுக்கிழமை | | | |
| மு. ப. 9 — 12 | உரைநடை | உரைநடை | உரைநடை |

450, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்,
14-12-75.

வ. கந்தசாமி
தேர்வுச் செயலாளர்.

# சமயப் போட்டி முடிவுகள்

வழக்கம்பரை சனசமூக நிலைய பஜனைச் சபையினர் வருடா வருடம் தமது நிலைய ஏடான நிலையக்குரல் மூலமாக நடாத்தும் சமயப் போட்டியில் கூடிய புள்ளிகளைப் பெற்று இவ்வாண்டுக்கான பரிசுகளைப் பெறறவர்களாகத் பினவருவோர் தெரிவு செய்யப்பட்டுளளனர். பரிசு பெறுபவர்கள் விபரம் பின்வருமாறு.

செல்வி ரதி சிற்றம்பலம் கொல்லங்கலட்டி, செல்வி அமலேஸ்வரி ஐயாததுரை பன்னாலை, செல்வன் சுவயோககணேசன கீரிமலை, செல்வன் நடுநாயகம் சூரியகுமார் கொல்லங்கலட்டி, செல்வி ஜெயவாணி நாகலிங்கம கட்டுவன், செல்வி யோகினி இராஜேந்திரம் குரும்பசிட்டி, செல்வன சிவஞானமூர்த்தி உதயகுமார் பன்னாலை, செல்வி கிரிஜா பரமேஸ்வரி ஐயர் வட்டுக்கோட்டை, செல்வி கலாவதி இரத்தினசிங்கம் வட்டுக்கோட்டை, செல்வி சந்திரவதன திருஞானசம்பந்தன் வட்டுக்கோட்டை, செல்வன் ஆலாலசுந்தரம கணேசகாந்தன் வட்டுக்கோட்டை, செல்வன் அப்பாத்துரை தேவானந்தன் கந்தரோடை, செல்வி நாகேஸ்வரி கந்தன் அளவெட்டி, எஸ் பி. கிருஷ்ணன் தென்மட்டுவில் செல்வி இந்துமதி பாலசிங்கம் வட்டுக்கிழக்கு, செல்வன் த இளங்கோதாசன் பண்ணாகம். செல்வன் சி. வ. விஜயரங்கன் குடியிருப்பு சுழிபுரம், செல்வன் ஸ்ரீகாந்தராசா விசுவலிங்கம் சுழிபுரம், செல்வன் பூலோகம் போகராசா மூளாய், செல்வன் உமாமுருகன் ஆறுமுகம பண்ணாகம், செல்வி மான்விழி வேலுப்பிள்ளை நெல்லியான, செல்வன சிவபாதம் சிவானந்தன் பனிப்புலம், செல்வன் இரா. பாலபாஸ்கரன சங்கானை மேற்கு, செல்வி உஷா வைத்தீஸ்வரசர்மா பொன்னாலை, செல்வன் சற்குணநந்தன் கைலாசநாதன் தொல்புரம், செல்வன் விஜயபாலன் கனகரத்தினம் மூளாய், செல்வி இராசரத்தினம் மீனா பொன்னாலை, செல்வி வயித்திலிங்கம் வனிதா பணடததரிப்பு செல்வி விஜிதா இராசரத்தினம் தெல்புரம், செல்வி முருகேசு விசாலாட்சி தொல்புரம் கிழக்கு, செல்வி ஞானமதி கநதையா பொன்னாலை மேற்கு, செல்வி அஞ்சன வீரசிங்கம வட்டுக் கிழக்கு, செலவன் முருகதாசன் விசுவலிங்கம் சுழிபுரம், செல்வி சரோஜாதேவி தாமோதரம்பிள்ளை பண்ணாகம் தெற்கு செல்வி வனிதா வேலாயுதபிள்ளை காளுவன், செல்வன பாலகிருஷ்ணன் நாராயணசாமி நெலலியான் செலவி வயிரமுத்து மதிவானி பண்டத்தரிப்பு, செல்வி மங்களராணி எதிர்வீரசிங்கம் பண்ணாகம்.

நேயர் நெஞ்சம்

## மூன்று பெரியார்கள்

19-ம் திகதி வெளிவந்த இந்துசாதனப் பத்திரிகையில் மூன்று சைவப் பெரியார்கள் - உயர்திரு கு. அமபலவாணபிள்ளை அவர்கள், உயர்திரு. முதலியார் செ. முததுத்தம்பி அவர்கள், உயர்திரு. புலவர்மணி சோ. இளமுருகனார் அவர்கள் சிவபதமடைந்ததைப் பறறி வாசித்தோம்.

மூனறு பெரியார்களும் எங்கள் சமயத்திற்கும், சமூகத்திற்கும், நாட்டிற்கும் மிக அரிய தொண்டுகளைத தத்தம் பாணியிற் செய்திருக்கிறார்கள். அவர்களைபோற கனவான்கள் எங்களுக்கு இலகுவில கிடைக்கமாட்டார்கள் அம்மூவரினதும் சிறப்புகளையும், பெருமைகளையும் எங்களால் என்றும மறக்கமுடியாது

அன்னார்களது ஆத்மாக்கள் சாந்தியடைய இறைவன் திருவருள் புரிவாராக. அவர்களது குடும்பததினர்களுக்குச் சைவ மககள மானசீகாமாகத் தங்கள அனுதாபங்களைச் செலுத்துகிறார்கள். அப் பெரியார்களது வாழ்க்கை வரலாறுகளையும், தொண்டுகளையும் தனிததனியே விபரமாக எழுதிவைக்க எங்கள் சமூகம கடமைப்பட்டிருக்கிறது.

சு. சிவசுப்பிரமணியம்,

1. சீவிய அங்கத்தவர் - யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை
2. ,, ,, - திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச்சபை
3. ,, ,, - (கொழும்பு) விவேகானந்த சபை

வழக்கறிஞர்

# சேக்கிழார் சுவாமிகள் கண்ட தமிழகமும் இல்லறமும்

[ செ. சின்னத்துரை இளைப்பாறிய ஆசிரியர் ]

(முன் வளர்ச்சி - 5)

தேனினுமினிய இப் பெரியபுராணத்தில் பேசப்படும் மெய் அடியார்கள் இயற்கையோடு உட்டிய பற்றற்ற அன்பை அடிப்படையாகக் கொண்ட அக வாழ்க்கை வாழ்ந்து காட்டியவர்கள் அவர்கள் செயற்கரும் செய்கை செய்த தீரர்கள் அவர்கள் ஆரம் கண்டிகை அவர்கள் உடுப்பது கந்தை ஈசன் மேலே தம் பொறுப்பை அர்ப்பணித்தார்கள் அவர்கள் இறைபணியில் நின்றார்கள் அவர்கள் ஈர அன்பர்கள் ஆனால் அவர்களுககு ஒரு குறையுமில்லை அவர்களது வீரம் பேசற்கரியது

"ஆரம் கண்டிகை ஆடையும்
கந்தையே
பாரம் ஈசன்பணி அல
தொன்றிலார்
ஈரஅன்பினர் யாதும்
குறைவிலார்
வீரம் என்றால் விளம்பும்
தகையதோ"

என்பது தெய்வச் சேக்கிழார் சுவாமிகளின் அருள்வாக்கு அகமும் புறமும் ஒருதன்மைத்தான வாழ்க்கை அவர்கள் வாழ்ந்தார்கள் திருக்கோயிலிருக்கும் திருமேனி தன்னை சிவன் எனவே கண்டார்கள் உலகினில் என் செயலெல்லாம் உன்விதியே — "நீயே உள் நின்றும் செய்வித்தும் செய்கின்றாயெனவும் நிலவுவதோர் செயலெனக்கின்றன் செயலே யென்றும்" என்ற சிவசித்தியார் செய்யுட்படி இறைவனுக்குத் தம்மை முழுதும் ஒப்புவித்து வாழ்ந்தார்கள் நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் துயின்றாலும் இறைவன் திருவடியை மறவாது வாழ்ந்தார்கள் ஈசனின் அருட்கண்ணைக் கொண்டு எவற்றையும் பார்த்தார்கள் காண்பான் காட்சி காட்சிப் பொருள் எல்லாம் ஒன்றென உணர்ந்தார்கள் எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் மன்னிய சீர்சங்கரன் தாள் மறவாத உத்தம சீலர்கள் யான் எனது என்னும் மலக்கோணை ஞான எரியால் அவர்கள் வெதுப்பினார்கள் மாசதனில் தாய்மையினின் வறுமை வாழ்வின் வருத்தத்தில் திருத்தில் மைதுனத்தில் சினத்தில் ஆசையினின் வெறுப்பில் இவையல்லாது மெல்லாம் அடைந்தாலும் ஞானிகள் தாம் அரனடியை அகலார் என்ற சித்தியார் செய்யுளின் படி விருப்பு வெறுப்பற்ற தூய வாழ்வே அவர்கள் வாழ்வு அவர்கள் பற்பல இடங்களில் பற்பல சாதியில் சஞ்சரித்து இறைபணியில் திளைத்து நின்றார்கள் அவ்வடியார்களிற் சிலர் பிராமணராகியும் சிலர் அசுரராகியும் ஒரு சிலர் வேளாளராகியும் ஒரு சிலர் சேனாபதியாகியும், வேடராகியும் ஏகலாயர், பறையர், பரதவர் முதலிய குலத்திலே தோன்றிச்சீரிய வாழ்க்கை வாழ்ந்தர்கள் அவர்கள் இறைபணிசின்று செய்தன எல்லாம் தவமாகத்திரண்டு பிறவி வேரை அறுக்கும் வாளாக உதவிற்று தாம் கொண்ட தொண்டை உறுதியாகக் கடைப்பிடித்து உயிர் நீக்கவரினும் செய்யவேண்டிய தொண்டை நிறைவேற்றினார்கள்.

"வாளால் மக அரிந்தூட்டவல்
லேனல்லன் மாது சொன்ன
சூளாலிளமைதுறக்கவல்
லேனல்லன் தொண்டு செய்து
நாளாறிற் கண்ணிடந்தப்ப
வல்லேனல்லனனிளிச்சென்
றாளவாதெப்படியோ திருக்
காளத்தி யப்பனுக்கே"

என்று பட்டினத்தடிகள் கூறியுள்ளார் இருவினைப் பாசக் கயிற்றின் வழி ஆட்டுவிப்பானாகிய தில்லைக் கூத்தன் வகுத்த வழியில் அமைதியைக் கண்டு எல்லாம் இறைவன் சந்நிதானம் என்றும் எங்கும் அண்ணல் தாள் உளது என்றும் நினைந்து சிவனடியார்கள் வாழ்ந்தார்கள். பரத கண்டத்தினதும் தமிழினதும் சைவப்பண்பட்டினதும் சிகரமாகவும் உயிர்நாடியாகவும் விளங்கினார்கள்.

பாச ஞானத்தினாலும், பசு ஞானத்தினாலும், பரம் பரனை நேசத்தோடு நாடி இளையான் குடி மாறநாயனர், சிறுத்தொண்டநாயனர், மூர்க்க நாயனர் முதலியோர் சிவனடியார்களுக்கு அமுது ஊட்டுவதில் சிறப்புற்று விளங்குகிறார்கள் கணம் புல்லார் திருப்புலீச்சரத் திருக்கோயிலிற் கணம் புல்லை விற்று நெய்வாங்கி விளக்கு எரித்து வந்தார் அது அற்றுப்போக தனது தலையை மாட்டி என்புஉருக எரித்தார் கலியநாயனர் திருவொற்றியூரில் எண்ணெய் விளக்கிடுவார். எண்ணெய் வாங்கப் பொருளில்லாமையால் இறுதியாக மனைவியை விற்றாயினும் தாம் செய்த தொண்டை நிறைவேற்றத் துணிந்தார். ஒருவரும் மனைவியரை வாங்க முன்வரவில்லை, தமது உடலின் உதிரத்தை தகளியில் இட்டு எரிக்க கத்திகொண்டு கழுத்தை அரிந்தார். இறைவன் அவரைத் தடுத்தருளினார் திருநாவுக்கரசர் கண்ணப்பர் முதலியோர் அன்பின் சிகரத்தை அடைந்து முத்தி பெற்றார்கள்.

## பிரிவிடல் சட்டத்தின் படி விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

. இல. 10754

1. புலோலிமேற்கு செல்வத்தம்பிமுத்துக் கிருஷ்ணனும்
2. பெண்வள்ளிநாயகியும் வழக்காளிகள்

எதிராக

1. ஷெ யூர் அம்பலவாணர் கைம்பெண் நாகம்மா
2. ஷெ யூர் கந்தையா ஐயம்பிள்ளை
3. ஷெ யூர் கந்தையா வேலுப்பிள்ளை எதிரிகள்

மேற்கூறிய இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எமக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இகன்கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1976-ம் ஆண்டு தை மாதம் 30 ஆம் திகதி (30-1-1976) வெள்ளிக்கிழமை காலை 10-00 மணி தொடக்கம் குறித்த காணியிடமாகவிருந்து முதலாவது மதிப்புத்தொகையிருந்து பங்களாருக்கிடையில் விற்கப்படும் குறித்த பங்களார் வேண்டதது தவறினால் உடனே பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறை கோயிற்பற்று புலோலிமேற்கு மழவராயகுறிச்சியிறை ஆண்பனைக்கலட்டி,, நி பர 2 குளி 014/32 அதைச்சேர்ந்தவைகளும கிணறும் எல்லைகிழக்கு சிவராசா பெண் இலட்சுமிப்பிள்ளைக்குடையவாதனம் வடக்கு மார்க்கண்டு பெண் புவனேஸ்வரிக்கும் தம்பிராசா குமாரசாமிக்குமுடைய வாதனம் மேற்கு கந்தையா வேலுப்பிள்ளைக்கும் கந்தையா ஐயம்பிள்ளைக்குமுடைய வாதனம் தெற்கு ஒழுங்கை இது 10-5-1970 ல் உலாந்த மேஸ்தர் சி. சுப்பிரமணியம அவர்களால் 1418ம் இலக்கப்பட்த்தில் விபரிக்கப்பட்டிருக்கிறது. இதில் மேற்குக் காணிக்குரிய அரைவாசிக் கிணறும் வழிவாய்க்காலும் நீக்கி மிகுதி முழுவதும் இதற்குக் கோட்டால் அனுமதிக்கப்பட்ட பெறுமதி ரூபா 12,000/-

R. S. இராமநாதன் J. P.
(Commissioner of Sales, Valuer and Auctioneer)
கொம்மிசனரும், விலைமதிப்பாளரும்
ஏல விற்பனையாளரும்,
நெல்லண்டை ரோட்டு, தும்பளை,
பருத்தித்துறை, 22-12-1975    125    26-12

## பல நோக்கப் பணி

1ஆம் பக்கத்து வளர்ச்சி

யார் வளவில் நால்வர் கோயில் அமைப்பதற்கும் இவர் அயராது பாடுபட்டார். இப் பெரியாரது ஆன்மா சாந்தி அடைய சைவபரிபாலன சபையினர் பேரில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

மேலும் திருவாளர்கள் ஆ. துரைராசசிங்கமும், த. கே. இராசரத்தினம், ஆர். முருகரத்தினம் மற்றும் பலரும் அஞ்சலி செலுத்தினார்கள்,

பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்ணீர் வடிக்க, ஆறாத சோகத்துடன் அன்னாருடைய இறுதிக் கிரியைகள் நடைபெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

தானும் அழிந்து தனமும் அழிந்து நீ(டு)
ஊனும் அழிந்து உயிரும் அழிந்(து), உடன்
வானும் அழிந்து மனமும் அழிந்தபின்
நானும் அழிந்தமை நான் அறியேனே.

My individuality perished, so did all my possession, body and life-breath. The (elements commencing with the) vast expansive space outside and the mind inside me perished. I too perished. I know not how all this happened!

Hindu Organ

FRIDAY DECEMBER 26, 1975

## Sacred Area Scheme

The congregation of the Eelam Sithambaram Temple at Karainagar deserves to be congratulated on its awareness to make the area about the shrine sacred. Keerimalai and Maviddapuram have earlier moved in the matter of the holy places therein being declared sacred. The Saiva worshippers of this country will be doing a religious duty if they would make common cause and press on the Authorities that every shrine, ancient or modern, must be preserved in its purity by the areas about the temple being demarcated and proclaimed as sacred.

A sacred place is one 'that is consecrated or held dear to deity or made holy by religious association'. Hence the area about a temple must necessarily be morally and spiritually perfect. High moral excellence is expected to be maintained in such sacred spots.

In ancient times the sacred area of a temple extended to a radius of several miles and any one entering the area became conscious of the consecration there. Nothing that tended to be irreligious or anti religious could be seen in that area. But with the passage of time, all precautions came to be thrown to the winds. Shrines came to be situated cheek by jowl with abodes of rank materialism and inns of entertainment.

It is very necessary that the Saiva Paripalana Sabhai, as the leading religious organization in the Island, should move in this matter of paramount religious importance and get the Authorities to frame a Scheme for Sacred Areas. Delimitation of areas, the prohibition of irreligious activities and the control of such places must be formulated in a carefully drafted scheme in order that the purpose of the intention and the fulfilment of the requirements of religion may be translated into practice.

The preliminary step that would facilitate the success of this movement should be for the *Aatheena Karththars* of the ancient shrines in our country to sit in Conference and formulate the basis for the Scheme for Sacred Areas. Saiva organizations must do likewise and take the responsibility to present the scheme to the Government for consideration.

## CONTRIBUTION TO THE STUDY OF COMPARATIVE RELIGION

Mr. S. Ampikaipakan, Principal emeritus, Vaitheesvara Vidyalayam read an interesting paper on the contribution of Sir P. Ramanathan to the study of comparative religion, at the Jaffna Campus under the auspices of the South Asian Studies Seminar on the 22nd December 1975.

Many know Sir Ramanathan as a great scholar or a great national leader, or a successful lawyer or a great statesman, or a reading educationist, or a great benefactor. But his contribution to the study of comparative religion is often neglected, Mr Ampikaipakan has briefly explained his contribution to the study of especially Saivism, Vedanta and Christianity.

At the outlet, Mr. Ampikaipakan referred to the great tributes paid to Ramanathan by foreign scholars like H. W. Schomerus and V. V. Ramana Sastri. Then he referred to his family heritage and the influence of his Guru Arulparanandaswamy of Tanjore. He made specific references to his Tamil commentaries on *Aththisoodi, Thirukkural Payiram* and *Bagavad Gita*. Thereafter he referred to his commentaries on the Gospel of the New Testament. His new interpretation of the gospels were welcomed in some parts of the Western World. He was an emissary of the East to the West Finally he made a plea for the reprint of his commentary on the Gita and the Lectures on the Culture of Soul among the Western Nations. A lively discussion followed

## Rare Addition to the Library of the Jaffna Campus

The library of the Jaffna Campus which is already enriched with valuable collections of books from various sources is recently enriched further by the addition of many rare books and other publications belonging to the library of Rev. Fr. S. Gnanaprakasar This collection was formally handed over to the Campus on the 20th of December by the Bishop of the Jaffna Diocese, Rev. Dr. S Deoguppillai. This collection is very strong in the Dictionaries of several languages and religious tracts.

## The Late Mudaliyar C. Muththuthamby

*(Here is a tribute from Muhandiram E. P. Rasiah who along with the Mudaliyar had been Members and Office-bearers of the Jaffna Saiva Paripalana Sabhai for more than two decades.)*

Mudaliyar Muththuthamby passed away peacefully on his 87th year on an auspicious day in the month of Markaly surrounded by his kith and kin —

"Painlessly, peacefully
on a Friday.
The boat slipped its
moorings to make Port"

Exit a fond father, an outstanding social worker and Jaffna's venerable, old, Mudaliyar. Exit my guru, guide, philosopher and friend. Exit a man among men. A guileless heart that throbbed with love suddenly ceased to beat. Closed for ever were those wise, bright eyes. Stilled now was that compassionate voice. At such a moment, it is said that

"On some fond breast the
parting soul relies,
Some pious drops the
closing eye requires",

These have I endeavoured to supply with these artless, but affectionate lines.

Born into life in the lap of luxury, he lived discarding ease and indolence. His married life was marked with unparalleled domestic felicity, He was a fond father ever proud of his dutiful daughters and distinguished sons. A beautiful blend of love, service and charity crowned his life richly lived and evenly shared. His was a striking figure with a dignified deportment crowned with a Gandhian cap. Of gentle speech that was pleasing and convincing, the soul of geniality and good-will, that was the venerable Mudaliyar. To the last he believed in causing his heart, his nerve and sinew to serve their turn filling the unforgiving minute with sixty seconds' worth of distance run. He had talked with crowds, yet kept his virtues He had moved with kings and ne'er lost the common touch. He had been the pillar of many a voluntary welfare and religious organisation now flourishing in Jaffna.

His word was as sound as a bond. He never failed a friend. In whatever work he undertook, he proved to be a man of precision, promptitude and perfection. Such was his life. —

"Lives of (such) great
men all remind us
We can make our
lives sublime,
And, departing leave
behind us
Foot-prints on the
sands of time".

I venture to think that his children will equate his loss, not so much by mourning – which they must — but by living for the things he lived and strived. That should ensure Peace for the departed soul.

Our heartfelt condolences to his accomplished daughters and illustrious sons May his soul rest in Peace!

"Tis all a chequer-board
of Nights and Days
Where Destiny with
men for Pieces plays.
Hither and thither
moves and mates and
slays
And one by one back
in the closet lays".

Om Shanthi! Shanthi!!
Shanthi!!!

## Book Donation Day at the Jaffna Campus
### 16th January 1976

The library is a great asset to any university campus. The Dean of the faculty of Humanities Jaffna Campus Prof. K. Indrapala and Mr. A. Sivanesaselvan from the library are organizing a Book Donation Day at the Jaffna Campus, on the 16th of January 1976. All prospective donors of books are kindly requested to contract the organizers with regard to this.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday December 26, 1975.

Editor-in-Chief B. N. Sivapirakamys

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org